# சேலம் மாவட்டம் காந்தியவாதி சசிபெருமாளின் மது ஒழிப்பு போராட்டம் - ஓர் ஆய்வு

**முனைவர். திருமதி. மா. பாண்டிக்கனி**
*உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை*
*அரசு மகளிர் கலைக் கல்லூரி, சேலம்.*

## முன்னுரை

ஒரு சமூகத்தின் மேம்பட்ட சமூக சிந்தனைகள், தொழில் வளர்ச்சி, விவசாய உற்பத்தி, ஊடக வளர்ச்சி போன்றவை தான் நாகரீகத்தின் ஊற்றுக் கண்கள். இவற்றின் மூலமே அச்சமூகமே அளவீடு செய்யப்படுகிறது. மென்மேலும் அச்சமுதாயம் வளர்ச்சியுறவும் இவை தூண்டுகோலாக செயல்படுகிறது. ஆனால் இவற்றைத்தான் அசுரகரங்களால் நசுக்க உருவெடுத்தது மது என்றால் அது மிகையன்று.நாகரீக காலகட்டத்திலும் மறையாத சுவடுகளாய் மக்களின் பாரமாய் தீர்க்க முடியாத பிரச்சனையில் வளம் வருகிறது மது.

போதை பொருளின் வசம் வராத மனிதர்களும் உண்டோ? என்பது இன்றளவும் ஓர் கேள்வி குறியாகவே இருக்கிறது. இதுபோன்ற சூழலை தடுக்க மகாத்மா காந்தி, தந்தை பெரியார், இராஜாஜி, காமராஜர், பேறறிஞர் அண்ணா, திரு.வி.க. போன்ற தேச தலைவர்களின் போராட்டமும் அறைகூவலும் இந்த பூமியில் ஒளிந்து மறைந்தாலும் முழுமையான பூரண மதுவிலக்கு என்ற சொல்லுக்கு புது அர்தத்தையோ புது மாற்றத்தையோ கொண்டுவர நவீன காலத்திலும் ஆட்கள் உண்டோ? எனும்போது மக்கள் எண்ணங்களின் அலைவரிசையில் கடல் அலையாய் தென்பட்ட மாமனிதர் தான் காந்தியவாதியான சசிபெருமாள். மாபெரும் மதுவிலக்குக்கே அவதாரமாக மறையாத காவியமாய் மறுபிறவி எடுத்துள்ள சசிபெருமாள் மகாத்மா காந்தியின் மொத்த உருவமாக திகழ்ந்தார். இவரது போராட்டமும், மதுவை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணமும் தமிழகமெங்கும் பரவியது.

## சேலம் வரலாறு

சேலம் மாவட்டம் கொங்கு நாட்டின் ஒரு பகுதியாக பண்டைய நாட்களில் இருந்து வந்துள்ளது. அதற்கு முன்னர் அதியமான் ஆட்சிப்பகுதியில் இருந்து வந்துள்ளது. சேலம் மாவட்டத்தின் வரலாறு பழமையானது. இங்கு புதிய கற்கால மனிதன் பயன்படுத்திய கோடரிகள், சுத்திகள், பானைகள், வளையல்கள் போன்றவை சேர்வராயன், கல்வராயன், வத்தலமலை, மேலகிரி, குட்டிராயன்மலை முதலிய பகுதியில் கிடைத்திருக்கிறது. இப்பகுதியில் எண்ணற்ற நடுகற்கள் கிடைத்திருக்கின்றது. இம்மாவட்டம் அதியமான், சோழர்கள், கன்னடர்கள், நாயக்கர்கள், திப்புசுல்தான் மற்றும் ஆங்கிலேயர்கள் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது[1].

சேலம் மற்றும் கோவைப் பகுதிகள் நீண்ட காலம் மதுரை நாயக்கர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. பிற்பாடு 1768-ல் மதுரை மைசூர் போரில் ஹைதர்அலி கட்டுப்பாட்டுக்கு சென்றது. பின்பு ஆங்கிலேயர்களின் இராணுவ படைத்தளமாக சேலம் விளங்கியது.ஆங்கிலேயர்கள் கட்டிய கோட்டை இன்றளவும் கோட்டைப் பகுதி என்றழைக்கப்பட்டு தற்போது நகரின் மையப்பகுதியாக உள்ளது. பிரிட்டி‘ கிழக்கிந்தியக் கம்பெனி படைக்கும், திப்புசுல்தானுக்கும் இடையே 1792-ல் நடைபெற்ற போரைத் தொடர்ந்து ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன் அடிப்படையில் திப்புசுல்தானிடம் இருந்து பெறப்பட்ட பகுதிகளைக் கொண்டு பாரமஹால் மற்றும் சேலம் மாவட்டம் 1792-ல் உருவாக்கப்பட்டது. தர்மபுரி மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளைக் கொண்ட பாரமஹால் (12 சமஸ்தானங்கள்) மற்றும் சேலம் மாவட்டம், கிரு‘ணகிரியைத் தலைநகராகக் கொண்ட தாலக்காட் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது.1801-ல் இவை இரண்டும் ஒன்றிணைக்கப்பட்டது. பின்னர் 1808-ல் இ.ஆர்.ஹார்கிரேல் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தபோது இது சேலம் மாவட்டம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு மாவட்டத் தலைநகர் தர்மபுரியில் இருந்து சேலத்திற்கு 1830-ல் மாற்றப்பட்டது. தொடர்ந்து சில ஆண்டுகள்

தலைநகர் ஒசூருக்கு மாற்றப்பட்டாலும் கூட 1860-ல் ஆட்சித்தலைவர் அலுவலகம் மீண்டும் சேலத்திற்கு மாற்றப்பட்டது.1965-ல் சேலத்தில் இருந்து சேர்வராயன் மலையின் வடக்கில் உள்ள பகுதி தனியாக பிரிக்கப்பட்டது. 1996-ல் மே மாதம் சேலம் மாவட்டத்தில் இருந்து நாமக்கல் மாவட்டம் உருவாக்கப்பட்டுத[2].

**இளம்பிள்ளை சசிபெருமாள்**

சேலம் மாவட்டத்தில் உள்ள இளம்பிள்ளை பேரூராட்சிக்கு அருகில் உள்ள இடங்கணசாலையில் அமைந்துள்ள இ.மேட்டுக்காடு என்ற கிராமத்தை சேர்ந்தவர் சசிபெருமாள்.கந்தசாமிகவுண்டருக்கும், பழனியம்மாள் தம்பதியாருக்கும் 22.02.1955-ம்ஆண்டு மூன்றாவது மகனாக பிறந்தவர் பெருமாள். சசிபெருமாள் அவர்களின் இயற்பெயர் ளு.மு. பெருமாள் ஆகும்.செ.கந்தசாமிகவுண்டர் ஊர் பெருந்தனக்காரர், ஊர்த்தலைவர் மற்றும் காங்கிரஸ் பேரியக்கத்தில் சேர்ந்து நாட்டு விடுதலைக்குப் போராடினார். அதன் பின் இவர் இ.மேட்டுக்காடு பகுதியில் பள்ளிக்கூடம் கட்டுவதற்காக தன் நிலத்தை தானமாக கொடுத்து கட்டுமான பணிக்கு உதவினார்.கந்தசாமிகவுண்டர் காமராஜருடன் இணைந்து அவரது கல்வி பணிக்காலத்தில் ஒரு ஆசிரியருக்கு உரிய ஊதியம் கொடுத்து உதவியதோடு மதிய உணவுத்திட்டத்திற்கும் பேருதவி செய்தார்.செ.கந்தசாமிகவுண்டனரின் மகன் பெருமாள் தன் தந்தையைப் போலவே இளம் வயதிலிருந்தே தியாக உள்ளமும், தேசப்பற்றும், சமூக சேவை பணியிலும் ஆர்வம் கொண்டு கதர்சட்டையோடு காந்தியவாதியாக வளர்ந்தார்.[3]

**"அஞ்சாமை அல்லால் துணை வேண்டா எஞ்சாமை**
**எண்ணி இடத்தால் செயின்"**

என்ற திருக்குறளுக்கு முன் உதாரணமாய் வாழ்ந்த மாமனிதர் காந்தியவாதி சசிபெருமாள்.

இன்றை தமிழ் மக்களின் துன்பமாய், துயரமாய், அச்சுறுத்தும், அரக்கனாய் நிற்பது மது என்னும் மயக்கம். மதுவின் கொடுமையை, மக்களின் நிலையை, தமிழ் மக்கள் அநேக பேர் உணர்ந்து மதுவுக்கு எதிராகப் போராடத் தொடங்கிவிட்டார்கள்[4] எனவே மதுவெனும் அரக்கனை தமிழ் மண்ணை விட்டு விரைவில் அகற்றப்போவது உண்மை.இத்தகைய மக்களின் விழிப்புணர்வுக்கு பல்வேறு காரணம் இருந்த போதிலும் காந்தியவாதி சசிபெருமாள் அவர்கள் மறக்க முடியாத ஒரு காரணி என்பது ஓர் திடமான உண்மை.பெரியவர் காந்தியவாதி சசிபெருமாள் வாழ்க்கையை நெருக்கமாக உற்று நோக்கும் போது தேசப்பற்று, தியாகமும், சுயநலமற்ற சேவை செய்யும் மனமும், முழுமையான பொதுநல நோக்கமே முன் நிற்கிறது.மதுவின் கோரப்பிடியில் இருந்து தமிழகத்தை விடுவிக்க வேண்டியது இமாலயப்பணி என்ற போதிலும் இதனை செய்து முடித்திட வேண்டும் என்று உறுதி கொண்டே முழு மது விலக்கை தமிழகத்தில் நிலைநாட்ட வேண்டும் என்று மாமனிதர் காந்தியவாதி சசிபெருமாள் தனது வாழ்நாள் முழுவதும் போராடினார்[5].

**காந்திஜி மீது பற்று**

சசிபெருமாள் அவர்கள் மகாத்மா காந்தியின் மீது அளவு கடந்த பற்று கொண்டிருந்தார். தேசத்துக்காக உழைத்த தேசதந்தை காந்தியின் போதனைகளும், அவரது எளிமையான வாழ்வும் சசிபெருமாளை கவர்ந்தது.இதன் விளைவாகவே சசிபெருமாள் காந்திய வழியில் தன் பயணத்தை தொடங்கினார். காந்தியை போல கதர் சட்டை, வேட்டி, கதர் குல்லா, அணிந்து காந்தியவாதியாகவே மாறினார்.மகாத்மா காந்தியை போலவே அறவழியில் பல போராட்டங்களை நடத்தினார்.1971-ம் ஆண்டு மதுவுக்கு எதிராக தனது கிராமத்தை சுற்றியுள்ள பகுதிகளில் முதலில் விழிப்புணர்வு கூட்டத்தை நடத்தினார்..மேலும் காந்தியின் சத்தியசோதனை மற்றும் அவரது யாத்திரைகள்,போராட்டங்களை அஹிம்சை வழியிலே நடத்தி சுதந்திரம் பெற்று தந்த காந்தியின் துணிச்சலாலும், முயச்சியாலும் ஈர்க்கப்பட்டார்.அதன்பின் காந்திஜியின் சத்தியசோதனை புத்தகத்தை படித்து அவரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு புழால் உண்ணுவதை கைவிட்டார். இதனை தொடர்ந்து சசிபெருமாள் காந்திய கொள்கையையே பின்பற்றினார்.[6]

காந்தியவாதி சசிபெருமாள் அவர்கள் தனது 16 வயதிலேயே பூரண மது விலக்குக்கோரி "கள்" இறக்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டார். காமராஜர் உடன் இணைந்து கல்லுக்கடை மறியல் போராட்டத்தில் 1973-ம் ஆண்டு ஈடுபட்டு சிறை சென்றார்[7].போராட்டத்தில் ஈடுபட்டதற்காக காந்தியவாதி சசிபெருமாள் அவர்களுக்கு சிறந்த "அறப்போராட்ட தொண்டர்" என்ற விருது வழங்கப்பட்டது.மேலும் தனது 18 வயது முதலே மதுவிலக்கு அமுல்படுத்தக்கோரி தனது முதல் போராட்டத்தை நடத்தினார். அதனால் ஐந்து நாட்கள் சிறை தண்டனையும் பெற்றார். அதனைத் தொடர்ந்து சேலம் மாவட்டத்தில் சசிபெருமாள் தனது சககாந்தியவாதிகளுடன் ஒரு குழுவாக இணைந்து மதுவிற்கு எதிராக போராடினார். அதே வழிமுறையை சேலத்தை சேர்ந்த டாக்டர் பிரான்சிஸ்ஆசாத்காந்தி, என்பவருடன் சேர்ந்து சசிபெருமாளும் பல இடங்களில் போராட்டம் நடத்தினார்.[8]

**சமூக சேவை மற்றும் சமூகப்பணி**

"சமூக சேவை மனிதாபிமான மற்றும் ஜனநாயக இலக்குகளை வளர்த்து வருகிறது" பின்தங்கிய மக்களின் வறுமையை ஒழிக்கவும், சமூகம் சேர்ந்து ஊக்குவிக்கும் பொருட்டு, பாதிக்கப்பட்ட மக்களை விடுவிப்பதர்க்காக பாடுபடுகின்றனர் சமூக சேவை பணியாளர்கள்.சமூக சேவையில் மிகவும் முக்கியமானவராக கருதப்படுபவர்கள் அன்னைதெரசா, முத்துலட்சுமிரெட்டி போன்றோர்கள் மிகவும் போற்றுதலுக்கு உரியவர்களாகவும் முன் உதாரணமாகவும் உள்ளார்கள்.இந்த பட்டியலில் சசிபெருமாள் பல இயக்கங்களை ஏற்படுத்தியும், மதுவிற்கு பல போராட்டங்களை நடத்தியும், தொழிலாளர்களுக்கும், ஏழை மக்களுக்கும் பல உதவிகளை செய்து தன் வாழ்நாள் முழுவதும் சமூகத்திற்காக உழைத்து தன்னுயிரை துறந்தார்.சமூக சேவையில் மிகவும் குறிப்பிடத்தக்க அமைப்பாக நியூ இந்தியா லேபர் யூனியன் அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் தொழிலாளர் நலனுக்காக பாடுபட்டவர் காந்தியவாதி சசிபெருமாள்[9].

**நியூ இந்தியா லேபர் யூனியன் அமைப்பு**

சசிபெருமாள் தொழிலாளர்களின் நலனிற்காகவும், அவர்களின் பிரச்சனையை தீர்க்கவும் "நியூ இந்தியா லேபர் யூனியன்" அமைப்பை தொடங்கினார்.1970-ம் ஆண்டு இளம்பிள்ளை சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட நெசவாளர்களை ஒருங்கிணைத்து "நியூ இந்தியா லேபர் யூனியன்" என்ற தொழிற்சங்கத்தை ஆரம்பித்தார். இந்த அமைப்பு பதிவு எண்.760/SLM - அரசு உரிமை பெற்ற அமைப்பு.தொழிற்சங்கத்தின் மூலம் தொழிலாளர்களின் பிரச்சனைகளுக்காக பல தொழிலாளர்களை இணைத்து இவர் பல போராட்டங்களை நடத்தினார். நியூ இந்தியா லேபர் யூனியன் அமைப்பின் மூலம் தொழிலாளர்களின் பல பிரச்சணைகளுக்கு தீர்வு காணப்பட்டது. நியூ இந்தியா லேபர் யூனியன் அமைப்பில் மாநில பொது செயலாளராக சசிபெருமாள் பொறுப்பு வகித்தார். இவர் தொழிலாளர்களின் உரிமைக்காகவும் அவர்களின் நலனுக்காகவும் போராடினார்.தொழிலாளர் சங்கத்தின் மூலம் தொழிலாளர்களின் குடும்பங் களுக்கும், அவர்களின் குழந்தைகளின் வாழ்க்கை மேம்பாட்டிற்கும் பல உதவிகளைப் பெற்றுத்தந்தார். நியூ இந்தியா லேபர் யூனியன் அமைப்பில் மாநில பொதுசெயலாளராக உள்ள காந்தியவாதி சசிபெருமாள் தொழிலாளர்களிடையே மது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த தொழிலாளர்களையும் அவருடைய நண்பர்களையும் இணைத்து மதுவிழிப்புணர்வு நாடகங்கள் நடத்தினார்.[10]

**பாரதி விழிப்புணர்வு மையம**

பாரதி விழிப்புணர்வு மையம் இளம்பிள்ளையில் உள்ள இடங்கணசாலை பேரூராட்சியில் வண்ணாங்குட்டை மேட்டுக்காடு என்ற பகுதியில் ஏற்படுத்தப்பட்டது.பாரதி விழிப்புணர்வு மையத்தில் தலைவர் காந்தியவாதி ளு.மு.சசிபெருமாள் பாரதி விழிப்புணர்வு மையம் 16.06.2005-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.பாரதி விழிப்புணர்வு மைய மாநாடுகளுக்கு வரும் மக்கள் தேவையான அடிப்படை வசதியில்லாமல் மக்கள் அவதிப்பட்டனர்[11]. எனவே

அடிப்படை வசதியை வலியுறுத்தி பாரதி விழிப்புணர்வு மையம் வெளியிடும் பத்திரிக்கையில் வலியுறுத்தப்பட்டது[8] பாரதி விழிப்புணர்வு மையம் மக்களுக்கு அடிப்படைவசதிகளை செய்து கொடுத்தது. மக்கள் தங்களது தேவைகளை பாரதி விழிப்புணர்வு மையத்தின் மூலம் தங்கள் வாழக்கையை மேம்படுத்திக்கொண்டனர். பாரதிய விழிப்புணர்வு மையத்தில் மூலம் ஏழை எளிய மக்கள் தங்களின் வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்வதற்காகவும், பெண்கள் தங்களின் வாழ்க்கை தேவைகளை பூர்த்தி செய்துக்கொள்ளவும் பலகைவினைப்பொருள் பயிற்சிகள் அளிக்கப்பட்டது[12].

**சுதந்திர தேசம் பள்ளி**

சசிபெருமாள் அவர்கள் காந்திஜியின் மீது அளவு கடந்த பற்றுக் கொண்டதால் “சுதந்திர தேசம்” என்ற பெயரில் பள்ளிக் கூட் தொடங்கி நடத்தினார். சுதந்திர தேசம் மழையர் மற்றும் தொடக்கப்பள்ளி காந்தியவாதி எஸ்.கே.சசிபெருமாள் அவர்களின் மூலம் 2004-ம் ஆண்டு இளம்பிள்ளை கே.ஆர்.தோப்பூர் ரோடு, வெள்ளை பிள்ளையார்கோவில் மேட்டுக்காடு பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பள்ளி அரசு பதிவு எண்: 156-2005 அரசு உரிமம் பெற்று நடத்தப்பட்டது இப்பள்ளியில் ீசநமப முதல் ஐந்தாம் வகுப்பு வரை மாணவர்கள் படித்தனர். இப்பள்ளியில் 300-க்கு மேற்பட்ட மாணவ-மாணவிகள் பயின்றனர். மேலும் சுதந்திர தேசம் பள்ளியில் கல்விக் கட்டணம் குறைவு, மாணவர்களுக்கு சிறந்த முறையில பாடங்கள் கற்று தரப்பட்டது.[21]நற்பண்பு, ஒழுக்கம், மனிதநேயம் ஆகியவை பயிற்று விக்கப்பட்டது. இயற்கை மருத்துவம், யோகா சித்தமருத்துவக் கல்வி முறை மற்றும் பயிற்சியும் அளிக்கப்பட்டது. இலவச கணிணி பயிற்சி, தொழிற்பயிற்சி கல்வி மாணவர்களின் தனித்திறமைகளை ஊக்குவிப்பதற்காக பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டது.[913]

**தமிழ்நாடு நுகர்வோர் மனித உரிமைக் கழகம்**

தமிழ்நாடு நுகர்வோர் மனித உரிமைக் கழகம் 11.02.1998-ம் ஆண்டு சின்னப்பம்பட்டி ரோடு இளம்பிள்ளை பகுதியில் சசிபெருமாள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைவராக சசிபெருமாள் பொறுப்பேற்றார். இந்த நுகர்வோர் உரிமைக் கழகத்தின் மூலம் நுகர்வோர்களுக்கான உரிமைகள் பெற்று தந்தார்.[14]

இவ்வாறு சசிபெருமாள் அவர்கள் தேசிய மக்கள் கூட்டமைப்பு இயக்கம், நவ இந்தியத் தொழிலாளர் சங்கம், மது போதைக்கெதிரான பொது மக்கள் இயக்கம், தேசிய மகாத்மா காந்தி இயக்கம், நவஇந்திய நிர்மாணிய இயக்கம், பசுமை பஞ்சாயத்து இயக்கம், மக்கள் மன்றம் சேலம் மற்றும் கலங்கி சித்த மருத்துவர் மற்றும் ஆராய்ச்சி சங்கம், மது போதை விடுதலைக்கான விழிப்புணர்வு பேரியக்கம், அகில இந்திய மகாத்மா காந்தி சமூக நலப் பேரவை போன்ற சமூக நல இயக்கங்கள் மற்றும் மது ஒழிப்பு இயக்கங்கள் ஆகியவற்றின் தலைவராகவும், உறுப்பினராகவும் இருந்து மக்களுக்கு மாபெரும் தொண்டாற்றினாா[15]

**2014-ம் ஆண்டு மாபெரும் சத்தியாகிரகப் போராட்டம்**

தமிழகத்தில் பூரண மதுவிலக்கு அமுல்படுத்த கோரி 30 ஜவனரி 2014-ம் ஆண்டு சென்னை மெரினா கடற்கரையில் காந்தி சிலை அருகே மாபெரும் சத்தியாகிரகப் போராட்டம் காந்தியவாதி சசிபெருமாள் தலைமையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஜனவரி 31 2014-ம் ஆண்டு சத்தியாகிரக தினம் அன்று சென்னையில் ஒரு மதுபானகடை முன் போராட்டத்தை தொடர தமிழக அரசு தடை விதித்தது. இந்த தடைக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு போடப்பட்டது. இதற்கு நான்கு நாள் கழித்து உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியது[16]

**செல்போன் டவரின் மீது ஏறி போராட்டம்**

2015-ம் ஆண்டு ஜுலை மாதம் காலை 8.15 மணிக்கு காந்தியவாதி சசிபெருமாள் அக்கோபுரத்தின் உச்சிவரை சென்றுவிட்டார். சசிபெருமாள் இறங்க மறுக்கவே சுமார் ஐந்தரை மணி நேரம் செல்போன் கோபுரத்தில் இருந்த அவரை மீட்க்கும் முயற்சியில் தீயணைப்பு

வீரர்கள் ஈடுபட்டனர். அப்பொழுது காந்தியவாதி சசிபெருமாள் அவர்கள் ரத்தவாந்தி எடுத்ததாக தெரிகிறது.[44]அவர் சட்டையில் ரத்தகறை படிந்திருந்தது. அவரை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் மாரடைப்பில் இறந்துவிட்டதாக அறிவித்தனர்.தனது உயிர் உள்ளவரை ஏழை எளிய மக்களுக்காக போராடி உயிர்விட்டார் காந்தியவாதி சசிபெருமாள்.[17]

**முடிவுரை**

காந்தியவாதி சசிபெருமாள் அவர்கள் தனது வாழ்க்கையை மதுவிலக்கு போராட்டத்தில் தமிழக மக்களுடைய நலனுக்காக போராடி தனது வாழ்நாள் முழுவதையும் மதுவிலக்கு போராட்ட களத்திலேயே கழித்தார்.அதன் பின் மதுவிலக்கு போராட்டக் களத்திலேயே தனது உயிரை மாய்த்துக்கொண்டார். காந்தியவாதி சசிபெருமாள். இவர் சமூக தொண்டு புரிந்த மாமனிதர் என்றால் மிகையாகாது.இவரது அனைத்து மதுவிலக்குப் போராட்டங்களும் மகாத்மா காந்தியின் அறவழியை பின்பற்றியே நடத்தப்பட்டது. இவர் மகாத்மா காந்தியின் தொண்டராக வாழ்ந்து தனது உயிரைவிட்ட மாமனிதர் காந்தியவாதி சசிபெருமாள்.

**மேற கோள்கள்**


1. பொன்.தெ.தர்மராஜன், அன்புக்கொடி வார இதழ் -4, நாள்: ஆகஸ்ட் 2015, ப-47.
2. Encyclopedia-busnagirajannan-Salem, Institute of Kongu studies 1992.
3. தினத்தந்தி நாளிதழ், சேலம், நாள் : 1 ஆகஸ்ட் 2015, ப-10.
4. அன்புக்கொடி, வார இதழ், 4, 13. ஆகஸ்ட் 2015.
5. துண்டுபிரசுரம்: தொழிற்சங்க உரிமை மாத இதழ், சேலம், நாள்: 29 மே 2010.
6. சசிபெருமாள், சுயக்கையேடு, மேட்டுக்காடு, நாள்: 01.05.1970.
7. துண்டுபிரசுரம்: வெல்க மே தினம், இளம்பிள்ளை, நாள்: 25 ஏப்ரல் 2010.
8. தினத்தந்தி நாழிதல், சேலம், நாள் : 8 ஆகஸ்ட் 2015, ப-5.
9. தமிழ் முரசு நாளிதழ், சேலம், நாள்: 1 ஆகஸ்ட் 2015, ப-22.
10. துண்டுபிரசுரம்: நியூ இந்தியா லேபர் யூனியன், இளம்பிள்ளை, நாள்: 13 டிசம்பர் 2010.
11. துண்டுபிரசுரம்: நியூ இந்தியா லேபர் யூனியன், 125வது மே தினவிழா, இளம்பிள்ளை, நாள்: நவம்பர் 2011, ப-14.
12. தினமலர் நாளிதழ், சேலம், நாள் :14 நவம்பர் 2001, ப-14.
13. நேர்காணல்: சசிபெருமாள் மகன் விவேக், வெள்ளைபிள்ளையார் கோயில், இளம்பிள்ளை, நாள்: 12 டிசம்பர் 2015.
14. தினமலர் நாளிதழ், சேலம், நாள்: 6 அக்டோபர் 2001, ப-20.
15. துண்டுபிரசுரம்: சுதந்திர தேசம் பள்ளி அரசு பதிவு எண்: 156.˙.2005 நாள்: 2 ஜுன் 2008.
16. நேர்காணல்: சசிபெருமாள் மகன் நவனீதன், மேட்டுக்காடு, நாள்: 9 டிசம்பர் 2016, நேரம்: காலை 10 மணிமுதல் 12 மணிவரை.
17. நேர்காணல்: சசிபெருமாள் மனைவி மகிழம், மேட்டுக்காடு, இளம்பிள்ளை, நாள்: 13 டிசம்பர் 2016, நேரம்: காலை 9 மணிமுதல் 11 மணிவரை.